


மதுரை கரிமேடு காவல் நிலையத்தில் விசாரணையின் போது மர்மமாக இறந்த வாலிபர் சுரேஷின் மரணத்திற்கு காரணமான போலீசார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி விருதுநகர் தேசபந்து மைதானத்தில் ஆதித்தமிழர் பேரவையினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தினகரன் – மதுரை பதிப்பகம்

07.02.2012

# ஆதிதமிழர் பேரவை ஆர்ப்பாட்டம்

விருதுநகர், பிப். 7:விருதுநகரைச் சேர்ந்த அருந்ததியர் இளைஞர் மரணமடைந்த பிரச்னையில், மதுரை கரிமேடு காவல்துறையினர் மீது கொலை வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்று கோரி ஆதிதமிழர் பேரவையினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

விருதுநகர் தேசபந்து மைதானத்தில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஆதிதமிழர் பேரவை மாவட்ட தலைவர் சுந்தர்ராசன் தலைமை வகித்தார். அமைப்பு செயலாளர் ராஜ்குமார் முன்னிலை வகித்தார். மாநில தலைவர் ஜக்கையன், மகளிர் அணி நிதி செயலர் மூக்கம்மாள், மாவட்ட செயலாளர் ஞானகுரு உட்பட பலர் பேசினர்.

விருதுநகர் நகராட்சி அருந்ததியர் காலனியை சேர்ந்த சுரேஷ் மதுரையில் சமையல் வேலைக்கு சென்றவரை, கரிமேடு காவல்துறையினர் அடித்து இழுத்து சென்று சித்ரவதை செய்ததில் உயிரிழந்துள்ளார். இதற்கு நீதி கிடைக்க வேண்டும். சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். சம்பந்தப்பட்ட காவல்துறையினர் மீது வன்கொடுமை வழக்கு, கொலை வழக்கு பதிவு செய்ய வேண்டும், சம்பந்தப்பட்ட போலீசாரை கைது செய்ய வேண்டும் என கோஷம் எழுப்பினர்.

# போலீசாரை கண்டித்து ஆர்ப்பாட்டம்

விருதுநகர், பிப். 7-

விருதுநகரை சேர்ந்தவர் சுரேஷ். வாகன திருட்டு வழங்கில், சிறையில் இருந்த போது பலியானார். இதை கண்டித்து ஆதித்தமிழர் பேரவையினர் ஆர்ப்பாட்டம் செய்தனர். தேசபந்து மைதானத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலர் ஈஸ்வரன் தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் சுந்தரராஜன், அமைப்பு செயலர் ராஜ்குமார், நிதிச் செயலர் வள்ளியம்மாள், துணைத்தலைவர் தலித்கந்தன், மகளிர் அணி மூக்கம்மாள், வக்கீல் பிரிவு கணேஷ்குமார், மாநில துணைத்தலைவர் நாகராஜன், தீண்டாமை ஒழிப்பு மாவட்ட செயலர் ஞான குரு பேசினர்.

தினமலர் - மதுரை பதிப்பகம்

07.02.2012